# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

# 1987 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இறப்பர் ஆராய்ச்சி (திருத்தச்) சட்டம்

*[1987, ஒக்ரோபர் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1987, ஒற்ரோபர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை :சதம் 60* *தபாற் செலவு : சதம் 75*

## 1987 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இறப்பர் ஆராய்ச்சி (திருத்தச்) சட்டம்

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.

ச. வ. ஒ—13/87

### இறப்பர் ஆராய்ச்சிக் கட்டளைச்சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1987 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இறப்பர் ஆராய்ச்சித் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் இறப்பர் ஆராய்ச்சிக் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :— 439 ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"சபையின் அமைப்பும் நடவடிக்கைகளும்.

3. (1) சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பெருந்தோட்டக் கைத்தொழில்கள் எனும் விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆள் அல்லது அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சின் எவரேனும் சிரேஷ்ட அலுவலர் ;

(ஆ) நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் அல்லது அத்தகைய அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சின் சிரேஷ்ட அலுவலர்;

(இ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் தவிசாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆள் அல்லது அவரது நியமத்தர் ;

(ஈ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆள் அல்லது அவரது நியமத்தர் ;

(உ) இறப்பர் கட்டுப்பாட்டாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆள் ;

(ஊ) எந்தத் தேர்தல் மாவட்டத்தினுள் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகமானது அமைந்துள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்; அத்துடன்;

(எ) இறப்பர் மரநடுகை, உற்பத்தி, விற்பனை அத்துடன் ஏற்றுமதி முதலிய துறைகளில் விசேட அறிவுடன் இறப்பர் கைத்தொழிலில் போதிய அறிவும் அனுபவமும் உள்ள ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்படும் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) ஐந்து உறுப்பினர்கள்.

(2) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பு மூலம், பதவி துறத்தல் மூலம், பதவியினின்று அகற்றப்படுதல் மூலம் அல்லது வேறு காரணத்துக்காக பதவியை முன்னதாகவே வறிதாக்கினாலொழிய, அவரின் நியமனத் தேதியிலிருந்து நான்காண்டுகள் கொண்டவொரு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியினின்று அகற்றப்பட்டாலன்றி மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையராதலும் வேண்டும்.

(3) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக/உடலியலாமை காரணமாக அல்லது ஒரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்றவிடத்து அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்தில்கொண்டு, அத்தகைய காலப்பகுதிக்கு அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் எந்நேரத்திலும், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட அப்பயன்படவுள்ள கடிதமூலம் அவரது பதவியைத் துறக்கலாம் என்பதுடன் அத்தகைய பதவிதுறத்தலானது அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுடையதாதலும் வேண்டும்.

(5) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சபையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும், அதற்கான காரணம் எதனையும் குறித்தொதுக்காமல் பதவியிலிருந்து அகற்றலாம். இவ்வுட்பிரிவின்கீழ் எந்த உறுப்பினர் தொடர்பில் கட்டளையானது ஆக்கப்பட்டதோ அந்த உறுப்பினர், கசெற்றில் கட்டளையானது வெளியிடப்பட்ட தேதியன்று பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் இறப்பினால், பதவி துறத்தலினால் அல்லது பதவியி னின்று அகற்றப்படுவதினால் அல்லது வேறு காரணத் துக்காக பதவியை வறிதாக்கும் சந்தர்ப்பத்தில், அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறோர் ஆளை நிய மிக்கலாம். அத்தகைய நியமிக்கப்பட்ட உறுப்பினரின் இடத்தில் நியமிக்கப்பட்ட ஆள் எவரும், அவர் எவ் வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரது பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக் குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான ஆலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடி யவாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படலாம்.

(8) அத்தகைய சபையில் வெற்றிடம் ஒன்றிருப்பதன் காரணமாகமட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப் பினரது நியமனத்தில் குறைபாடு இருப்பதன் காரண மாகமட்டும் சபையின் செயல், முடிவு அல்லது நட வடிக்கை எதுவும் செல்லுபடியற்றதெனக் கருதப்படலா காது.

(9) சபையின் அடுத்தடுத்துவரும் மூன்று சாதாரண கூட்டங்களுக்கு வருகை தராத, சபையினது நியமிக் கப்பட்ட உறுப்பினர் எவரும் தமது பதவியை வறி தாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின் சபையானது அதன் தற்றுணிபில் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோர் உறுப்பினரை நியமிப்பதற்கு முன்னர் எந்நேரத்திலும் அவரது பத வியில் அவரை மீள அமர்த்தலாம்.

(10) சபையின் நடவடிக்கைகள் இக்கட்டளைச் சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட் டுள்ள முறையில் நடாத்தப்படுதல் வேண்டும்.".

3. பின்வரும் புதிய பிரிவானது 3 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் : முதன்மைச் சட்டவாக்கத்தில் 3அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

"சபையின் தவிசாளரும் உப தவிசாளரும்.

3அ (1) அமைச்சர், சபையின் இரு உறுப்பினர் களை முறையே சபையின் தவிசாளராகவும் உப தவி சாளராகவும் நியமித்தல் வேண்டும்;

(2) மூன்றும், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக தவிசாளரினதும் உப தவிசாளரினதும் பதவிக்காலம், சபையின் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும் ;

ஆயின் எவ்வாறாயினும், தவிசாளர் அல்லது உப தவிசாளர் சபையின் உறுப்பினர் ஒருவராக பதவிக்காலம் முடிவடையுமுன்னர் தவிசாளராக அல்லது உப தவிசாளராகப் பதவிவகிக்காதொழியுமிடத்து அமைச்சரானவர், சபையின் வேறோர் உறுப்பினரை விடயத்துக் கேற்றவாறு தவிசாளராக அல்லது உப தவிசாளராக நியமிக்கலாமென்பதுடன் அந்தகைய உறுப்பினர், தவிசாளர் அல்லது உப தவிசாளர் பதவியை முன்னராகவே வறிதாகினாலன்றி, அவர் எத்தவிசாளரை அல்லது உப தவிசாளரை அடுத்துறுகின்றாரோ அந்த தவிசாளரின் அல்லது உதவித் தவிசாளரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு தவிசாளராக அல்லது உப தவிசாளராகப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், அதற்கான காரணம் எதனையும் குறித்தொதுக்காமல் தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம்.

(4) தவிசாளர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென, அமைச்சர், சபையின் வேறெவரேனும் உறுப்பினரை நியமிக்கலாம்.

(5) தவிசாளர் எந்நேரத்திலும், தமது கைப்பட எழுதி அமைச்சருக்கு முகவரியிட்டனுப்புவதன் மூலம், தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம். அத்தகைய பதவி விலகலானது அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுடையதாதல் வேண்டும்.".

சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது " 3(6) என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்படும் எல்லா ஒழுங்கு விதிகளும் 4(12) என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்படும் எல்லா விதிகளும் " என்னும் சொற்களுக்குப் பதிலாக, " 4(12) என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்படும் எல்லா விதிகளும் " என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையைத் திருத்துதல்.

5. முதன்மை சட்டவாக்கத்துக்கான அட்டவணையானது, அட்டவணையின் 9, 10 அத்துடன் 11 என்னும் விடயங்களை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று சபையின் உறுப்பினர் ஒருவராகப் பதவிவகிக்கும் ஆளொவ்வொருவரும், அத்தகைய ஆளொருவர் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியினது ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு அத்தகைய பதவியை வகிப்பினுஞ்சரி அல்லது முதன்மைச்சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினது ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு அத்தகைய பதவிக்கு பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருப்பினுஞ்சரி அவர், முதன்மைச் சட்டவாக்கத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று பதவியை வகிக்காதொழிதல் வேண்டும். இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவிவகிக்கும் சபையின் உறுப்பினர்கள், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று பதவியை வகிக்காதொழிதல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.